# நிலையான நிலையாமை

*முனைவர் சு. பாஸ்கர்*
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் ஆண்டவன் கலை, மற்றும் அறிவியல் கல்லூரி
திருவானைக்கோவில்,திருச்சி, தமிழ்நாடு, இந்தியா

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5040

## அறிமுகம்

உலகம், தோன்றியவிதமும் செயல்படும் நிலையும் எண்ணும்போது வியப்பிற்குரியதாகவே உள்ளது. உயிரினங்கள் பற்றியும் வாழும் நிலைகளைப் பற்றியும் காணும்போது, இவ்வுலகம் புதிராகவே இருக்கிறது. மனிதர்கள் தோற்றம் பெற்று, சிந்தனைகளால் மாற்றம் பெற்று வாழ்கின்றனர். உணவு முறைகள், இடங்கள், பழக்கவழக்கங்கள், பல்வேறு மொழிகள், கொள்கைகள் போன்றவற்றுடன் வாழ்கின்றனர். மனிதர்கள் மன நிலையில், பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. நல்ல எண்ணங்களோடும், தீய எண்ணங்களோடும்கலந்து வாழ்கின்றனர். பலரிடம் சுயநலம் மிகுந்து காணப்படுகின்றன. பிறரை ஏமாற்றுவதும், அவர்களுக்குத் துன்பம் தருவதும், இயல்பாக் கொண்டுள்ளனர். பிறருடைய செல்வங்களைக் கவர்ந்து கொள்வதைத் தீமையாக நினைப்பதில்லை. மனிதர்கள், நிலையாமையை உணராததே, இத்தகைய தீமைகள் வளர்வதற்குக் காரணமாக அமைகின்றன என்பதே உண்மையாகும்.

நாம் வாழ்கின்ற வாழ்க்கை நிலையற்றதாகும். இதை உணர்ந்தாலே, மனிதர்களிடம் நல்ல எண்ணங்கள் வளர்ந்து நிற்கும்˙ நற்செயல்கள் சிறந்து நிற்கும். நிலையாமை என்னும் தத்துவமே நிலைத்த தத்துவமாகும் குறிப்பாக இளமை, செல்வம், யாக்கை போன்றவை நிலையற்றவை என்று உணரவேண்டும். நிலையாமையின் தன்மையைப் பற்றி,

**"இளமையும் நில்லாயாக்கையும் நில்லா**
**வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா"**[1]

என்று மணிமேகலை காப்பியம் கூறுகின்றது. தம் இளமை காலத்தில் நிலையாமையை மனிதர்கள் உணர வேண்டும். உணர்ந்தவர்களுக்குப் பெருந்துன்பம் இல்லை. நிலையில்லா உலகில் நிலையான பொருளைத் தேட வேண்டும். இக்கருத்தை மையமாக வைத்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**இளமை நிலையாமை**

இளமைப் பருவம் மிகவும் துடிப்பான பருவம் நினைத்ததைச் சாதித்தே ஆக வேண்டும் என்று, மனம் செயல்படும் பருவம் துள்ளல் நிறைந்த பருவம் எதையும் துணிந்து செயல்படுத்தும் பருவம் ஆற்றல் பெற்ற பருவம். இத்தகைய இளமை பருவத்தைச் சான்றோர்கள் போற்றுவர். தீமைக்கு இடம் தராமல் நன்மைக்கு முதன்மைக் கொடுத்து வாழ வேண்டும் என்றெல்லாம் அறிவுரை வழங்குவார்கள். "இளமையில் கல்"[2] என்கிறார் ஔவையார். இளமையில் கல்வி கற்றால் மனதில் நன்கு பதியும் என்பதே உண்மை. நல்லெண்ணங்களைப் பதிய வைக்க வேண்டும் என்று விரும்பிய கவிஞர்கள், குழந்தைகளுக்கு அறிவுரைப் பாடல்களையும் இளைஞர்களுக்கு எழுச்சியுட்டும் பாடல்களையும் கொடுத்துச் சிறப்பிக்கிறார்கள்.

தலைசிறந்த இந்த இளமைப் பருவத்திற்கு, அழிவு உறுதியாய் உண்டு என்பதை நாம் மறக்கக்கூடாது. சிலர் மிகுந்த அழகோடு திகழ்வதாக ஆணவம் கொள்வர். சிலர் முதுமையை ஏளனம் செய்வர். சிலர் கடுமையான வார்த்தைகளால் முதியோர்களை வசைபாடுவர். சிலர் இரக்கமின்றி அடிக்கவும் தயங்கமாட்டார்கள். இத்தகைய இளைஞர்கள் வருங்காலத்தில் தாங்கள் முதியவர்கள் என்பதை நினைப்பதில்லை.

வயதின் காரணமாக வரும் சிற்சில இயலாமைகளை இளைஞர்கள் பொறுத்துக் கொள்வதும் உயர்ந்த பண்புகளில் ஒன்றாகும். பிறந்து, வளர்ந்து சிறந்து, வாழும் உயர்ந்த இளமைப் பருவத்திற்கும் அழிவு உண்டு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இளமைப்பருவம் முடிந்து முதுமைப்பருவம் வரும்போது உடலில் தோன்றும் மாற்றங்களை,

> ***"பல்சான்றீரே! பல்சான்றீரே!***
> ***கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்***
> ***பயன்இல் மூப்பின் பல்சான்றீரே!"***[3]

என்று புறநானூறு எடுத்துக் காட்டுகிறது. பலவாகிய சிறந்த குணங்களை உடைய சான்றோர்களே! கெண்டை மீனின் நடுமுள்ளைப் போன்று தலைமுடி நரைத்துக் காணப்படும். கன்னங்கள் திரைபோல சுருக்கம் கொள்ளும். விரைவாக செயல்பட முடியாத பயனில்லாத முதுமை தோன்றும் என்று உடல் மாற்றங்களை நரிவெரூ உத்தலையார் எடுத்துக் கூறுகிறார். மேலும் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசி என்னும் நூலில்

> **"பாளையாம் தன்மை செத்தும்,**
> **பாலனாம் தன்மை செத்தும்**
> **காளையாம் தன்மை செத்தும் காமுறும்**
> **இளமை செத்தும்"4**

என்று குழந்தைப்பருவம், பாலகன் பருவம், காளை போன்ற விடலைப்பருவம், இளமைப்பருவம் என்று ஒவ்வொரு பருவமும் அழிந்து மாறிவருவது இயற்கையென்று நாதகுத்தனார் கூறுகின்றார். பௌத்த சமய நூலான இந்நூலில் இளமை நிலையாமையைக் காட்டுகிறார். இதேபோன்று,

> **"தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை**
> **ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்"**[5]

என்று திருமந்திரம் கூறுகிறது. நம்முடைய இளமை நாள்தோறும் தேய்ந்து அழியும் தன்மை கொண்டதாகும். இளமை ஒழிந்தபின் முதுமையில் செயற்கரிய செயல்கள் செய்வது கடினமானது என்று திருமூலர் கூறுகிறார். நாம் தவறு செய்ய நினைக்கும் முன்பாக இந்த இளமைப்பருவம் அழியும் தன்மையுடையது என நினைத்துவிட்டால் தவறு செய்யமாட்டோம்.

குளிர்ச்சிப் பொருந்திய சோலையினிடத்து பயன் தருகின்ற மரங்கள் எல்லாம் கனி உதிர்ந்து வீழ்தலைப்போன்று இளமை அழிந்துவிடும் என்று நாலடியார் கூறுகின்றது. இதனை,

**"பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்**
**கனியுதிர்ந்து வீழ்ந்தற்று இளமை"[6]**

என்ற பாடலில் காணலாம். இளமை நிலைத்திருக்காது என்பதை உணர வேண்டும். இளமை போனால் திரும்ப வராது. எவ்வளவு தான் முயற்சித்தாலும் செல்வத்தைப் பயன்படுத்தினாலும் சென்ற இளமை மீளாது. இதை அறிந்த கண்ணதாசன்,

**"வாழ்க்கை எல்லாம் தீர்ந்ததே**
**வடிவம் மட்டும் வாழ்வதேன்**
**இளமை மீண்டும் வருமா?**
**மணம் பெறுமா? முதுமையே சுகமா?**
**காலம் போகும் பாதையை இங்கே யார் காணுவார்?"[7]**

என்று கேட்கிறார். காலம் செல்ல செல்ல வாழ்க்கைத் தீர்ந்துவிடும். நம் உருவம் மட்டும் இருக்கும் இளமை இருக்காது மீண்டும் வராது என்று மீளாஇளமைத்தன்மையை, கண்ணதாசன் தெளிவாக உணர்த்துகிறார்.

இளமை உள்ள காலத்திலே நன்கு உழைத்து நமக்கும் பிறருக்கும் பயன்படும் வகையில், நேர்மையான வழியில் வாழ்ந்து காட்ட வேண்டும்.

## செல்வம் நிலையாமை

நாம் இவ்வுலகில் பிறந்து விட்டோம். உயிர் வாழ்வதற்கு உணவு தேவை. மானத்தைக் காப்பதற்கு உடைதேவை.பாது காப்பாக இருப்பதற்கு இருப்பிடம் தேவை. இந்த அடிப்படைத் தேவைகள் கண்டிப்பாக நமக்கு வேண்டும். ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதர்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்ய ஆங்காங்கே தேடிப் பெற்றனர். தேவைக்கு மேல் பெறவில்லை. ஆனால் அறிவு வளர வளர செல்வத்தைத் தேவைக்கு மேல் சேர்த்து வைக்கின்றனர். போதும் என்ற மனம் எவருக்கும் இல்லை. வறுமையோடு வாழும் மனிதர்களைப்பற்றி கவலைப்படுவதும் இல்லை.

கொடுக்க விருப்பமும் இல்லை தவறான வாழ்க்கை முறைகளைக் கற்றனர். தவறுகளை மறைக்க செல்வத்தைப் பயன்படுத்தினர். அடிப்படைத் தேவைகளைப்பெற செல்வம் தேவைதான். வள்ளுவர் கூட,

**"அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை**
**பொருள்இல்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு"[8]**

என்கிறார். அதாவது செல்வம் இல்லாதவருக்கு இவ்வுலக வாழ்வு இல்லை என்பது உண்மைதான். மேலும் செல்வம் இருப்பவனைத் தான் இவ்வுலகம் நாடுகிறது. பொருள் இல்லாதவனை மனைவி, தாய் கூட மதிக்கமாட்டார்கள். அவன் பேச்சை யாரும் கேட்க மாட்டார்கள் என்ற ஔவையார் கருத்தை,

**"கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்**
**எல்லோரும் சென்றுஅங்கு எதிர்கொள்வர்- இல்லானை**
**இல்லாளும் வேண்டாள் மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்**
**செல்லாது அவன் வாயிற்சொல்"[9]**

என்ற நல்வழி பாடலில் காணலாம். செல்வத்தோடு வாழ்கின்ற காலத்தில் சொந்தங்கள் கொண்டாடி உலக மக்கள் தேடிவருவர். வறுமை வந்த காலத்தில் நெருங்கிய சொந்தமாக இருந்தாலும் விலகி விடுவர். இதுதான் உலக மக்களின் நிலை. இக்கருத்தை,

**"வாழும் நாளிலே கூட்டம் கூட்டமாய்**
**வந்து சேர்கிறார் பாரடா?-**
**கை வறண்ட வீட்டிலே உடைந்த பானையை**
**மதித்து வந்தவர் யாரடா".**

***(க.தி.பா,தொ.3,பாடல் -432.)***

என்ற பாடலில் கண்ணதாசன் கேட்கிறார். செல்வம் உயர்ந்ததுதான். அதைச் சேர்ப்பதும் பெருமைதான் மதிப்பற்றவரையும் மதிப்புடையவராக மாற்றும் செல்வம் என்பதற்கு மாற்றுக்

கருத்து கிடையாது. செல்வம் பெற்றவர் தன்தேவைக்கு மேல் இருக்கும் செல்வத்தை இல்லாதவர்களுக்குக் கொடுப்பது தான் உயர்ந்த பண்பு. இதற்கு வள்ளுவர். "வறியார்க்கொன்று ஈவதே ஈகை"[10] என்கிறார். ஔவையாரும் "இட்டார் பெரியோர்" இடாதோர் இழிகுலத்தோர்"[11] என்கிறார். கொடுப்பவர் உயர்ந்தவர். கொடுக்க மறுப்பவர் தாழ்ந்தவர். என்று கூறுவதில் இருந்து அனைவருக்கும் ஈகை குணம் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

**"மனம் என்ற கோயில்**
**திறக்கின்ற நேரம் - அழைக்காமல்**
**அங்கே தெய்வம் வந்து சேரும்".**
***(வா.தி.பா. பாடல். 256)***

என்று கொடுக்கின்ற மனம் படைத்த இடத்தில் தான் தெய்வம் அழைக்காமலே வந்து தங்கும் மனம் கோயிலுக்கு இணையானது என்கிறார் வாலி.

இந்தச் செல்வமும் நிலையானதல்ல. உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் செல்வமும் ஒரு நாள் அழிந்துவிடும். ஆணவத்தின் காரணமாகவோ, யார் பெரியவர் என்ற போட்டியின் காரணமாகவோ, அல்லது உயிர் விடுதலின் காரணமாகவோ செல்வம் அழிவது உறுதியாகும். அளவுக்கு அதிகமாக செல்வத்தைச் சேர்த்து தானும் அனுபவிக்காமல் உற்றாரும் அனுபவிக்காமல், முன்பின் தெரியாதவர் பயன்படுத்தும் நிலை உருவாகிவிடும். இதை நல்வழி,

**"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்**
**கூடுவிட்டு இங்கு**
**ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப்பணம்"[12]**

என்ற பாடலில் காட்டுகிறது. உழைத்துத் தேடிய செல்வத்தை மண்ணில் புதைத்து வைத்திருப்பவர்களைக் கேடுகெட்ட மனிதர் என்கிறார் ஔவையார்.

செல்வம் செல்வோம், செல்வோம் என்று அடுத்தவர்களிடம் கைமாறுவதால் செல்வம் என்ற பெயர் வந்திருக்க வேண்டும். உடுமலை நாராயணகவி,

**"ஓரிடந்தனிலே நிலை இல்லா உலகினிலே**
**உருண்டோடிடும் பணம் காசெனும்**
**உருவமான பொருளே!"**
***(உ.நா.பா, பாடல் -13)***

என்ற பாடலில் நிலையில்லா செல்வத்தை உணர்த்துகிறார். செல்வத்தின் நிலையாமையை உணர்ந்தவர்கள் செல்வத்தை விட குணம்தான் சிறந்தது அதைப்போற்றி பாது காக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதையறிந்த கண்ணதாசன்,

**"பணம் என்னடா பணம் பணம்**
**குணம் தானடா நிரந்தரம்"**
***(க.தி.பா, தொ-3, பாடல்-488)***

என்ற பாடலில் காட்டுகிறார். நாம் வாழ்வதற்குப் பொருள் வேண்டும். தன் தேவைபோக இல்லாதவர்களுக்குக் கொடுத்தும் தீய வழியில் செல்லாமலும் பொருளுள்ள வாழ்க்கை வாழவேண்டும். எந்த நிலையிலும் இக்கருத்தை நாம் மறக்கக்கூடாது.

**யாக்கை நிலையாமை**

உலகத்தில் பிறந்த உயிர்கள் அனைத்தும் சமம், பிறந்த உயிர்கள் அனைத்திற்கும் இறப்பு உறுதியாய் உண்டு,இளமையை இழந்தால் கூட முதுமையோடு வாழலாம். செல்வத்தை இழந்தால் கூட கடும் உழைப்பால் மீண்டும் செல்வத்தைப் பெற்று வாழலாம். ஆனால் உயிரை இழந்தால் அனைத்தும் அழிந்துவிடும். அழகு மிகுந்த உடலையும் இழந்து விடுவோம் இந்த உண் மையை நினைக்காத மக்கள். நீண்டகாலம் வாழ்வதாக தங்களை நினைத்துக் கொள்கின்றனர். கனவில் மிதக்கின்றனர். தவறான வாழ்வைக் கடைப்பிடிக்கின்றனர். கண்ணதாசன் கூறுவது போல திருநீறு புசுவதும்,திருமண் புசுவதும் சமய அடையாளங்களாக

கருதப்பட்டாலும், இறப்பை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என்பதற்குதான். இருக்கும் காலத்தில் சிறப்புடன் வாழ வேண்டும்.

சங்க இலக்கியமான புறநானூற்றில், நரிவெரூஉத்தலையார்,

**“கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்**
**பிணிக்குங் காலை இரங்குவிர் மாதேர்**
**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்”[13]**

என்று கூறுகிறார். இப்பாடலில், முதுமையான காலத்தில் எமன் பாசக் கயிற்றால் பிணிக்கும்போது நாம் வருந்து வோம். அதனால் வாழும் காலத்திலேயே பிறருக்கு துன்பம் செய்யாமல் வாழ வேண்டும் என்ற கருத்தை அறிகிறோம். கணியன் பூங்குன்றனார், “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற புறநானூற்றுப் பாடலில் “சாதலும் புதுவது அன்றே”[14] என்று கூறுகின்றார். பிறந்த உயிர்கள் அனைத்தும் ஒரு நாள் இறப்பது உறுதி. இறப்பது என்பது புதுமையானது அல்ல. இது உலகத்து இயற்கை என்கிறார். மேடுபள்ளம் உள்ள உலகம் போல, இன்பம் துன்பம் நிறைந்தது தான் வாழ்க்கை என்பதை உணர வேண்டும் மனித உயிர்கள் ஒரு நாள் இறப்பது உறுதி என்பதை அறிந்து, இறந்தவர்களை நினைத்து வேதனையடைய வேண்டாம். பல ஆண்டுகளாய் அழுது உருண்டாலும் அவர்கள் திரும்பி வரப்போவதில்லை. இதுதான் இயற்கை. இறந்து போகும் நாள் வரைக்கும் எல்லோருடனும் கூடி, உண்டு மகிழ்வோடு வாழுங்கள். இக்கருத்தை,

**“ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் - வேண்டா**
**நமக்கு அதுவழியே' நாம்போம் அளவும்**
**எமக்குஎன் என்று இட்டு உண்டு இரும்.”[15]**

என்ற பாடலில் காண்கிறோம். கண்ணதாசன் தன் பாடலில் பிறப்பு நமக்குத் தெரியும். இறப்பு தெரியாது வாழ்க்கை என்பது ஒரு வியாபாரம் போல, பிறப்பு என்பது வரவு, இறப்பு என்பது செலவு என்கிறார். இறப்பு என்ற ஒன்று இல்லையென்றால், அனைவரும் இவ்வுலகில் வாழ முடியாது என்கிறார். இதனை,

**“வாழ்க்கை என்பது வியாபாரம் - வரும்**
**ஜனனம் என்பது வரவாகும் - அதில்**
**மரணம் என்பது செலவாகும்.”[16]**

என்ற பாடலில் உணர்த்துகிறார். யாக்கை நிலையாமையைப் பற்றி வாலி, பிறக்கும் போதும் குழந்தைகளின் பசியைப் போக்க பால் கொடுக்கிறோம். இறந்த பிறகும் மனிதருக்கு இறுதியாக பால் ஊற்றுகிறோம். தாய்-தந்தை இருவரால் உண்டான உடலை இறந்த பிறகு நான்கு பேர் தூக்கிச் செல்கிறார்கள். தாயின் கருவறையில் தொடங்கிய உடல், தெருவோடு சென்று கல்லறையில் முடிகிறது என்கிறார். இக்கருத்தை,

**“பிறந்தாலும் பாலை ஊற்றுவார் - இங்கே**
**இறந்தாலும் பாலை ஊற்றுவார்**
**உண்டானது ரெண்டாலதான்**
**ஊர்போவது நாலாலதான்**
**கருவோடு வந்தது தெருவோடு போனது**
**மெய்யென்று மேனியை யார் சொன்னது?”[17]**

என்ற பாடலில் அறிகிறோம். பிறப்பையும் அதன் பின்னால் வரும் இறப்பையும் வாலி சிறப்பாக ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

வைரமுத்து, அனைவருக்கும் பிறக்கும் போதே இறக்கும் தேதி என்ற ஒன்று உண்டு என்றும் உறவுகள் என்பது பொய்யானது என்றும் நம் உடல் என்பது கனவுகள் வாங்கிய பைபோன்றது என்றும் கனவுகள் கலைவது போல உடலும் ஒருநாள் அழிந்து விடும் என்றும் நிலையாமையைக் காட்டுகிறார். இக்கருத்தை,

**“பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி**
**இருக்கின்றது என்பது மெய்தானே**
**உடம்பு என்து உண்மையில் என்ன**
**கனவினில் வாங்கிய பைதானே!”[18]**

என்ற பாடலில் சுட்டுகிறார். நிலையில்லா உலகில், நிலையில்லா வாழ்க்கையில்

நிலையானது புகழ் மட்டுமே. வள்ளுவரைப் பார்த்தவர்கள் யாரும் இங்கில்லை. திருக்குறள் என்ற ஒற்றை நூலால் காலம் கடந்து, உலக மக்கள் மனதில் வள்ளுவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை அறிவோம். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு,

**"நாம் இருக்கும்போதே இழப்பது**
**இளமையும் செல்வமும்**
**நாம் இருக்கும் வரை இருப்பது கல்வி**
**நாம் இறந்த பிறகும் இருப்பது புகழ்"[19]**

என்ற கவிதையைச் சான்றாக வைக்கிறேன். நிலைத்த புகழை, உயர்ந்த புகழை அடைய அனைவரும் பாடுபட வேண்டும்.

## நிறைவு

இளமையும் செல்வமும் உடலும் என்றும் நிலையில்லாதவை. நாம் இளமையோடும் செல்வத்தோடும் நல்ல உடல்நிலையோடும் இருக்கும்போதே பிறருக்கு உதவி செய்யும் குணத்தையும் பிறருக்கு தீமை செய்யாத நல்வாழ்க்கையையும் கடைபிடித்து வாழ வேண்டும். நாம் செய்கின்ற செயல்களினால் நிலையில்லா வாழ்க்கையிலே நிலைத்த புகழைப் பெற வேண்டும்.

## துணை நின்ற நூல்கள்


1. ஆனந்தன்.சு முனைவர், தமிழ் இலக்கிய வரலாறு, ப.78.
2. ஔவையார், நீதிநூல் (ஆத்திசூடி). பா.29.
3. சுப்பிரமணியன். ப.முனைவர், சங்க இலக்கியத்தேன், பா.195.
4. ஆனந்தன்.சு முனைவர், தமிழ் இலக்கிய வரலாறு, ப.113.
5. திருமூலர், திருமந்திரம் (தொ -1), பா.179.
6. கௌமாரீஸ்வரி.எஸ் (தொ.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (நாலடியார்) பா.17
7. கண்ணதாசன், கண்ணதாசன் திரையிசைப்பாடல்கள். (தொ.3),பா.394.
8. திருவள்ளுவர், திருக்குறள் (பகலவன் (தொ.ஆ)) குறள்.247
9. கௌமாரீஸ்வரி.எஸ் (தொ.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (நல்வழி), பா.34.
10. திருவள்ளுவர் திருக்குறள் (பகலவன் (தொ.ஆ)) குறள்.221
11. கௌமாரீஸ்வரி.எஸ் (தொ.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (நல்வழி), பா.2
12. மேலது பா.22.
13. சுப்பிரமணியன். ப.முனைவர், சங்க இலக்கியத்தேன், பா.195
14. மாணிக்கம்.அ (உ.ஆ), சங்க இலக்கியங்கள் (புறம்) தொ-1, பா.192
15. கௌமாரீஸ்வரி.எஸ் (தொ.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (நல்வழி), பா.10.
16. கண்ணதாசன், கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள் தொ-1, பா.339.
17. வாலி, வாலி 1000, திரையிசைப் பாடல்கள், (தொ-1) ப.482.
18. வைரமுத்து, வைரமுத்து திரைப்பாடல்கள் (தொ-1) ப.216.
19. பாஸ்கர்.சு. முனைவர்,கவிமலர்கள், ப.113.